# மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
## பதவி வெற்றிடங்கள்

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பொருத்தமான தகைமை பெற்று பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நிரந்தரமான பதவியில் உள்ள ஊழியர்களிடம் இருந்து மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பொருத்தமான ஆவணங்களுடன் (விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டவாறு) உரிய நிறுவனத்தின் செயலாளர்/பதிவாளர்/முதல்வர்/பணிப்பாளர் ஊடாக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உதவிப்பதிவாளர் /தாபனக்ககிளை (கல்விசாரா) க்கு 31.08.2026 திகதிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள்அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

### 01. முகாமைத்துவ உதவியாளர் தரம் III (களஞ்சியக் காப்பாளர்)

தகைமைகள்:

1. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் கீழ்வரும் படங்களில் திறமைச்சித்தி அடங்கலாக ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்:-
   i. சிங்களமொழி / தமிழ்மொழி
   ii. ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   iii. கணிதம்

   &

2. கா.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் (பொது வினாத்தாள்கள் தவிர) ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பின்வரும் தகைமைகளை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்:

a. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து கணனி பிரயோகத்தில் பெறப்பட்ட ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை.
   &
b. கணினி பிரயோக தொகுப்புகளைப் பயன்படுத்துவதில் இரண்டு வருட கால அனுபவம்.

விசேட தகைமைகள்

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக, பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

களஞ்சிய பராமரிப்பில் ஒரு வருட அனுபவம் மற்றும் /அல்லது க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் வணிகப் பாடத்தில் சித்தி அல்லது க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் சித்தி.

குறிப்பு: பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்டபடி பாதுகாப்பு வைப்புத்தொகை வழங்கப்பட வேண்டும்.

சம்பள அளவு: U-MN 1 (III) Rs.49,475-17x540-58,655 p.m.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 02/2025 (i) இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

தெரிவு முறை: பின்வரும் பாடங்களில் எழுத்துப் பரீட்சை (75% மதிப்பெண்கள்)

- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொது அறிவு
- கணனி அறிவு
- களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவு

மற்றும்

நேர்முகத் தேர்வு (25% மதிப்பெண்கள்)

** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன சுற்றறிக்கை கடிதம் இல. 06/2020 இன் நிபந்தனைகளின்படி பல்கலைக்கழக முறைமையினுள் ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்கான நியமனமாகும், சந்தர்ப்பத்தில், அரச தாபனக்கோவையின் அத்தியாயம் VII பிரிவு 09 இற்கமைய உரிய சம்பளப்படி நிலையில் அமர்த்தப்படுவர்.

ஒப்பமிடப்பட்டது
பதிவாளர்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
10.08.2026